REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 21உ சனி (6—8—55) ★ ★ வெளியூர்: ஆடி 22உ ஞாயிறு (7—8—55) [இதழ் 46

மனைவி — அசையும் சொத்து!

'சர்க்கார் ஊழியர்கள் அசையாப் பொருள்கள் ஏதேனும் வாங்குவதற்கு முன், சர்க்காருக்குத் தெரிவிக்கவேண்டும்,' என்று உத்திரவிடப்பட்டிருப்பதாக முதன் மந்திரி கோபால ரெட்டி ஆந்திர சட்ட சபையில் தெரிவித்திருக்கிறார்.

உதவி சபாநாயகரான கே. சுப்பா ராவ், 'சர்க்கார் ஊழியர்கள் திருமணம் செய்துகொள்ளும்போது கிடைக்கும் 'சீதனம்' குறித்தும் சர்க்காருக்கு தகவல் தரவேண்டுமா?'—என்று கேட்டார்.

உடனே முதன் மந்திரி கோபாலரெட்டி, 'மனைவியரை, சர்க்கார், அசையும் சொத்துக்களாகவே கருதுகிறது,' என்று பலத்த சிரிப்புக்களிடையே பதில் தந்திருக்கிறார்.

'கழகம் ஒரு கலங்காத கடிகாரம்!'

நடவடிக்கை எடுக்கிறார்களாம்!

"இலங்கை இந்தியர் பிரச்சினை குறித்து, மாநில சர்க்காரும், இந்திய சர்க்காரும் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்; இந்த நிலையில் இதற்குமேல் நான் எதுவும் சொல்லக் கூடாது,"

என்று, மந்திரி பக்தவத்சலம் மேல் சட்டசபையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை-ஆந்திரா எல்லைப் பிரச்சினை

மாநில சர்க்கார்களே தீர்வு காணலாம்

கர்னூல், ஆக. 5—

"தமிழ்—ஆந்திரா எல்லைகள் பற்றி இரு மாநில சர்க்கார்களும், பேச்சுவார்த்தைகளின் மூலம் ஒரு முடிவு காண இயலாமற் போனால்தான், எல்லைக்குழு நியமிப்பது பற்றி யோசிக்க வேண்டும்,"

என்று முதன் மந்திரி கோபால ரெட்டி சட்ட சபையில் தெரிவித்திருக்கிறார்.

"சென்னை சர்க்காருடன் எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடத்துவது என்பது குறித்து இலாகா அதிகாரிகள் பரிசீலனை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்; சித்தூர், சேலம், வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள ஆந்திரப் பகுதிகள் குறித்தும் கவனிக்கப்படும்; சித்தூர் மாவட்டத்தில் துவங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கும் கிளர்ச்சிக்கும்—சென்னை சர்க்காருக்கும் எவ்விதத் தொடர்புமில்லை; ஆகவே, அது குறித்து சென்னை சர்க்காருடன் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை; எல்லைப் பிரச்சினைகளை விவாதிப்பதற்கென சென்னை நிதி மந்திரி சுப்பிரமணியம் கர்னூலுக்கு வரவில்லை; என்றாலும், அது பற்றியும் சிறிது பேசினோம்," என்றும், அவர் சட்ட சபையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'மாளிகையில் வாழுகின்றனர் வடவர்—மரத்தடியில் நிற்கிறோம் நாம்!'

'என்று மாறுவது இந்த நிலை?—விடுதலை பெற வீறிட்டெழுவோம்!'

சி. பி. சிற்றரசு இலட்சிய முழக்கம்

"லைசென்ஸ் பெறாத வண்டி, போலீஸ்காரருக்குப் பயந்து வேகமாக ஓடிவிடும்; வரி கட்டாத லாரிகள், அதிகாரிகளுக்குப் பயந்து வேறு பக்கமாக ஓடிவிடும்; போக்கிரி கணவனுக்குப் பயந்து, மனைவி, சுவையில்லாத உணவை விரைவில் சமைத்துக் கொட்டி விடுவாள்; ஆளும் வர்க்கத்தினருக்குப் பயந்து, குடிமக்கள், சில நேரங்களில் தவறான பாதைகளில் செல்வதுமுண்டு; ஆனால், மணி காட்டும் கடியாரம், மன்னன் அதட்டலுக்கு பயந்து வேகமாகவும் ஓடாது—சோம்பேறியின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி நிதானமாகவும் ஓடாது—அக்கிரமக்காரர்களின் அதட்டலுக்கு அஞ்சி அறவே நின்றுவிடவும் செய்யாது—திருடன் கையிலுள்ள கத்திக்குப் பயந்து நள்ளிரவைக் காட்டாது—தவறாமல் சாவி கொடுத்துக்கொண்டிருந்தால் சரியாக ஓடிக்கொண்டே இருக்கும்; 'காலா காலத்தில் விழித்தெழ வேண்டும்,' என்று நினைத்தால், அலாரத்தை ஒலித்து நம்மை எழுப்பி விட்டுவிடும்; அந்தக் கடியாரத்தைப் போன்றதுதான் நமது இயக்கம்—நமது திராவிட முன்னேற்றக் கழகப் பணி."

"இப்படிக் காலம் தவறாமல் ஓடிக்கொண்டிருக்கும் கடியாரத்தை நாம் வாங்கி, ஆறு ஆண்டுகளாகிவிட்டது; ஆனால், நாம் அதன் அலாரத்தை ஒரே ஒரு முறைதான் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம்; அந்த நாள்தான் சென்ற 1953 ஜூலை 15-ம் நாள் காலை ஆறு மணி; அந்த அலாரத்தை அன்று மாலை ஆறு மணிக்குத்தான் நிறுத்தினோம்; அந்த ஒரு பகல், நம் இயக்கத் தோழர்களை மாத்திரம் அது தட்டி எழுப்பவில்லை—சர்க்காரை எழுப்பியது; போலீஸ் இலாகாவை எழுப்பியது; உள்நாட்டுப்பத்திரிகைக் காரியாலயங்களையும் எழுப்பியது."

"அதுமாத்திரமல்ல—உலக உருண்டையின் வேறோர் பாகத்திலுள்ள ஐக்கிய அமெரிக்காவின் நியூயார்க் நகரத்திலும், அந்த நகரத்திலுள்ள 'நியூயார்க் டைம்ஸ்' (New York Times) என்ற பத்திரிகை அலுவலகத்திலும் அதன் ஓசை உரத்துக் கேட்டது; 'வெளி நாடுகளில் உங்கள் குரல் உண்டா?'—என்று கேட்டவர்களின் குரல்வளையை நெறித்ததைப்போன்றிருந்தது அந்தச் செய்தி."

—இவ்வாறு, சென்னை-சைதாப்பேட்டை தேரடி மைதானத்தில் 30—7—55 மாலை 6½ மணியளவில், தோழர் செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்ற தி மு கழகக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசினார்:—

"என் நினைவுக்கு எட்டிய வரையில், 'நியூயார்க் டைம்ஸ்' என்ற செய்தித் தாளில் வந்த செய்தியைக் கூறுகிறேன் — கொஞ்சம் கவலையோடு கேளுங்கள்:—

"ஆரியர் படையெடுப்பு நடந்த மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்திய பூபாகத்தில் பரவியிருந்த திராவிட இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழும் சென்னை மாநிலத்தில், சென்ற மூன்று நாட்களாக திராவிடர்கள் பெரும் கிளர்ச்சி செய்து வருகின்றனர்;

அந்தக் கிளர்ச்சியின் காரணங்கள் மூன்று:—

ஒன்று: பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தஇந்தியப் பிரதமர் நேரு, திராவிடர்களின் உண்மையான கோரிக்கைகளை கேலி செய்யும் முறையில்—அவர் பேசிய காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில்— 'நான்சென்ஸ்,' என்று குறிப்பிட்டதற்குப் பதிலளிக்கும் முறையில், என்றுமில்லாத அளவுக்கு பயங்கரமான முறையில் இரயில்கள் நிறுத்தப்பட்டன;

"இரண்டாவது: ஒரு பார்ப்பனரான—சென்னை மாகாண சர்க்காரின் முதலமைச்சர் திரு. இராசகோபாலாச்சாரியார், ஜாதிப் பாகுபாடுகளை பழைய படி தொழில் மூலம் நிலைநாட்ட வேண்டுமென்ற எண்ணத்தால் கொண்டுவந்த புதிய கல்வி முறை திட்டத்தின் மீது ஆத்திரமடைந்த திராவிடர்கள், அவர் வீட்டிற்கு முன்பு மறியல் செய்தார்கள்;

"மூன்றாவது: ஒரு இரயில்வே போர்டிலுள்ள பெயரை மாற்ற வேண்டுமென்ற கிளர்ச்சி;

"இந்த மூன்று காரணங்களாலும் ஏற்பட்ட கிளர்ச்சியின் காரணத்தால் போலீஸ்காரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள்; இதுவரை அறுவர் மாண்டிருக்கிறார்கள்; கல்லெறிகள், கலவரம், கிளர்ச்சி இவைகளுக்கிடையே இரயில்கள் ஓடுவது தாமதப்பட்டிருக்கிறது."

"இவ்வாறு, விரிவான விளக்கங்களுடன் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது; இப்படிவந்த செய்திகளினாலேயே அளவு கடந்த மகிழ்ச்சி வெள்ளத்தால் நாம் மூழ்கி விடுவோம் என்பதல்ல பிரச்சினை;

"நாம் கேட்டுக் கொண்டிருக்கும் திராவிடநாட்டுப்பிரிவினை ஒலியின் முதல் முழக்கம் ஒரு பக்கம் அட்லாண்டிக் மாசமுத்திரம்—மற்றோர் பக்

(4-ம் பக்கம் பார்க்க)

இஸ்கந்தர் மீர்ஜா

பாக். கவர்னர்-ஜெனரலாகிறார்!

கராச்சி, ஆக. 5—

பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரலான குலாம் முகமதுவின் உடல் நிலை மிகவும் குன்றியிருப்பதால் அவருக்குப் பதில் பாகிஸ்தான் உள்நாட்டிலாகா மந்திரி மேஜர்-ஜெனரல் இஸ்கந்தர் மீர்ஜா, 'ஆக்டிங்' கவர்னர்-ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிக்கப்பட்டுள்ளதாம்.

சம்பிரதாயப்படி நியமனப் பிரகடனத்தை வெளியிடுமாறு பிரிட்டிஷ் அரசி எலிசபெத் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறாராம்.

தொழிலாளர் மீது தடியடிப் பிரயோகம்

தொழிற்சங்க நிர்வாகிகள் தேர்தல் தகராறு காரணம்?

நாசிக், ஆக. 5—

சர்க்கரை ஆலை ஒன்றின் தொழிற் சங்கத்தினர் இரு கோஷ்டிகளிடையே மோதுதலைத் தவிர்ப்பதற்காக என்று கூறி, போலீசார், தொழிலாளர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

சில போலீஸ்காரர்களுக்குங்கூட கலவரத்தினால் சில காயங்கள் பட்டதாகக் கூறப்பட்டது.

தொழிற் சங்க நிர்வாகிகள் தேர்தலின்போது ஏற்பட்ட தகராறுகளினாலேயே இந்த கலவரம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

விடுதலை வீரர்களுக்கு இறுதி மரியாதை

புனா, ஆக. 5—

கோவா விடுதலைப் போரில் ஈடுபட்டு, போர்த்துகீசிய போலீசாரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலியாகி வீரமரணம் எய்திய பி. கே. தோரட், சித்தியானந்த சாகா என்ற இரு தொண்டர்களின் சடலங்கள் இன்று, தகனம் செய்யப்பட்டன.

அவர்களுக்கு இறுதி மரியாதை செலுத்துவதற்காக இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் மயானத்தில் குழுமியிருந்தனர்.

திலகர் இறந்தபோது, நிகழ்ந்த உருக்கமான காட்சிகள், 35 ஆண்டுகளுக்குப்பின், பூனாவில் இப்போது தான் காணப்பட்டனவாம்!

மேட்டுப்பாளையத்தில் காகித ஆலை!

கோவை, ஆக. 4—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மேட்டுப்பாளையத்தில் ரூ. 312 லட்சம் செலவில் ஒரு காகித உற்பத்தித் தொழிற்சாலை நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தகவலை, மாவட்ட நிர்வாக அதிகாரி பி. கே. நம்பியார் தெரிவித்தார்.

உடுமலைப்பேட்டை தாலுகா அமராவதி நகரில், சுமார் ரூ. 80 லட்சம் செலவில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கவும் சர்க்காரிடம் திட்டம் தரப்பட்டிருப்பதாயும் அவர் கூறியுள்ளார்.

பூரி பாசஞ்சர் வண்டிக்கு விபத்து

இருவர் பலி; பதின்மூன்று பேருக்குக் காயம்

கல்கத்தா, ஆக. 5—

சென்னையிலிருந்து வடக்கே—பூரி செல்லும் 'சென்னை—பூரி பாசஞ்சர்' இரயில் இன்று காலை 6-15 மணிக்கு கொவாதா—புண்டி இடையே தடம் புரண்டதினால், இரண்டு இரயில்வேத் தொழிலாளர் கொல்லப்பட்டதுடன், 13 பேர்களுக்குப் பலகாயம் ஏற்பட்டிருக்கிறது.

எஞ்சினுக்கு அடுத்த 5 பெட்டிகளும் கவிழ்ந்திருக்கின்றன.

'இந்தி கட்டாயமில்லை—ஆனாலும், கற்றுக்கொள்ள வேண்டுமாம்!'

வெளிநாட்டிலாகா சேவைக்கு இந்தி மொழி அறிவு குறித்து நேருவின் முரண்பட்ட கூற்று!

"வெளிநாட்டு இலாகாவில் வேலை செய்பவர்கள் இந்தி மொழி தெரிந்திருக்கவேண்டும் என்ற கஷ்டத்திற்கு ஆளாக்கப்படவில்லை," என்று மக்கள் சபையில், பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

"வெளிநாட்டு இலாகாவுக்கென நடத்தப்படும் போட்டிப் பரீட்சைகளுக்கு இந்திமொழி, கட்டாய பாடமாகவோ அல்லது, பரீட்சை மொழியாகவோ இருக்கவில்லை," என்று பிரதமர் பண்டித நேரு, பண்டிட் திவாரி என்பவர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

"ஆனால், போட்டிப் பரீட்சையில் தேறிவிட்ட பிறகு, இந்தி மொழியில் ஒரு கட்டாயப் பரீட்சை எழுதவேண்டும் என்று கோரப்படுகின்றனர்; ஏனெனில், அவர்கள் இந்தி கற்றுக்கொள்ளாவிட்டால், எந்தவித முன்னேற்றமும் அடையவில்லை," என்றும் பண்டித நேரு தெரிவித்திருக்கிறார்.

"நீண்டநாட்கள் சேவை செய்துவிட்ட வெளிநாட்டிலாகா அதிகாரிகள் இந்தி கற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டிருக்கிறார்கள்; ஆனால் ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு இந்தி கற்றுக்கொள்வது கடினமாகிறது" என்றும் பண்டிதர் குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 6-8—'55 சனி

கூர்ந்து கவனிக்க வேண்டும்

'ஏக இந்தியா!'—'அகில பாரதம்!'—'எல்லோரும் இந்தியர்!' என்று, இந்தியத் துணைக்கண்டத்தினை ஒரே நாடு என்று கூறி, "அந்த நாட்டு மக்களின் நலிவுக்குக் காரணம், 'சுரண்டும் முதலாளி—சுரண்டப்படும் தொழிலாளி; வளமாக வாழும் பணக்காரன்—வாழமுடியாமல் வாடும் ஏழை' என்ற, மாமலையும்—வீழ்பள்ளமும்போன்ற ஏற்றத் தாழ்வுகள்தான்; இந்த 'மேடு'கள் தகர்க்கப்பட்டு, பள்ளங்கள் தூர்க்கப்பட்டு சமன் செய்யப்பட்டுவிட்டால் நாட்டவரின் நலிவு நீங்கும்; அவர்கள் நல்வாழ்வு பெறுவர்!" என்று கூறிடும் 'அகில இந்தியா'க்காரர்களுக்கு—அவர்கள் கூறும் ஒரே நாட்டின்—ஏற்கனவே மேடாக இருக்கும் வட பகுதி மேலும் மேலும் உயர்த்தப்படுவதற்கும், ஏற்கனவே பள்ளமாயிருக்கும் தென் பகுதி தொடர்ந்து பள்ளமாகவே இருந்துவருவதற்கும் இந்தியப் பேரரசின் முதல் ஐந்தாண்டுத் திட்டம் துணை செய்கிறது—என்ற உண்மை, இன்னமும்கூட ஏனோ புலப்படவில்லை!

தொழிலதிபர்கள், வர்த்தக நிறுவனங்கள், கட்சிப்பற்றற்ற நேர்மையாளர்கள்—ஏன் காங்கிரஸ்காரர்களில்கூட பலர், சட்டசபை, மக்கள் சபைகளில் உறுப்பினர்களாயிருப்போர், மந்திரிகளாயிருக்கும் வாய்ப்பு பெற்றோர் இவர்களுக்கெல்லாம் புலப்பட்டிருக்கிறது—முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கும் பேருண்மை!

இவர்களில் பலரும், 'அகில இந்திய' அரசியல் அமைப்பினை மனப்பூர்வமாக அணைத்துக்கொண்டிருப்பவர்கள்தான்; என்றாலும், உண்மையினை—அதுவும், திட்டத்தைத் தயாரித்தோரின் புள்ளிவிவரங்கள் முகத்தில் அறைந்து, கண்களை உறுத்தி உணர்த்தும்போது—எப்படிக் கூறாமலிருக்க முடியும்?

'தென்னாடு—வடநாடு' என்று பிரித்துப் பேசுபவர்கள் 'நாமாக' இருக்கிறோம் என்பதால், பலர், உண்மையை ஒப்புக்கொள்ள மறுத்ததுண்டு—துவக்கத்தில்; ஆனால் பிரித்துப் பேசவேண்டிய நிலை தவிர்க்க முடியாது போகவே, பலரும், முதலில் சாடைமாடையாக—பின்னர், இழுத்தாற்போல—பின்னர், தாழ்ந்த குரலில்—அடுத்து, நண்பர்களிடம்—அடுத்து, கூட்டங்களில்—பின்னர், சட்ட மன்றங்களில்—படிப்படியாக, 'வடக்கு—தெற்கு' என்று பிரித்துப் பேச முன்வந்தனர்.

"திட்டத்தில், தென்னாடு புறக்கணிக்கப்பட்டது—வடநாட்டு மந்திரிகளில் சிலரும், இங்கு வடநாட்டுக்காரர்கள் பிடித்து வைத்திருக்கும் 'ஏஜெண்டு'கள் சிலரும் கூறுகிற சொத்தைக் காரணங்களினால் அல்ல—வட நாட்டவர் ஏற்கனவே திட்டமிட்டு, உருவாக்கி வைத்துக்கொண்டிருக்கும் எண்ணங்களின் செயல் வடிவம்தான் முதல் ஐந்தாண்டுத் திட்டம்," என்று நாம் விளக்கம் தந்து வருகிறோம்.

"வடநாட்டவரின் அரசியல் நடைமுறை—'வடநாடு வேறு, தென்னாடு வேறு,' என்ற உண்மையெனும் வைரத்திற்கு மேலும் 'பட்டை' தீட்டவே உதவுவதாக இருக்கிறது," என்பதையும் நாம் அவ்வப்போது விளக்கி வந்திருக்கிறோம்.

'டெல்லி தேவதைகள் அருள் கிடைத்தால்,'—என்று பேசினார், ஆந்திர திட்ட மந்திரி காளா வெங்கட்ராவ்; அதற்கான விளக்கமும் இங்கு தந்திருந்தோம்.

"டெல்லி தேவதைகள், தென்னாட்டவர்—திராவிடர் என்னதான் கல்லும் கசிந்துருகுமாறு, 'அருள் தாரும் டெல்லி வாழ் பாரத மாதாவே' என்று பாடினாலும், கருணை காட்டமாட்டார்கள்—அருள் பாலிக்கமாட்டார்கள்; அது ஏன்?"—என்பதற்கான அடிப்படை காரணங்களை விளக்கியும் நாம் பன்முறை எழுதியிருக்கிறோம்.

'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில்தானே தென்னாடு புறக்கணிக்கப்பட்டது; அடுத்த திட்டங்களில் அந்த அநியாயம் நிகழாது,' என்று சிலர் எண்ணிக்கொண்டிருக்கக்கூடும்.

ஆனால், உருவாக்கப்பட்டு வரும் நகல் திட்டங்களும், அவற்றுக்குத் தரப்பட்டு வரும் வியாக்கியானங்களும், தொடர்ந்து தென்னாடு, பின்தங்கிய நிலையில்தான் இருக்க வேண்டி வரும் என்பதைத்தான் நமக்குச் சொல்வனவாயுள்ளன.

ஆந்திர மாநிலம், இரண்டாம் திட்டத்தில் சேர்ப்பதற்கென ரூ. 800 கோடி மதிப்பில் திட்டம் தயாரித்தது; பின்னர், 'அது அதிகம்' என்று கருதப்பட்டு, ரூ. 500 கோடி மதிப்புக்குக் குறைந்தது.

அதற்குப் பின்னர், திட்டக் குழுத் துணைத் தலைவருடன் ஆந்திர முதன் மந்திரி விவாதித்த பின்னர், அது, பாதிக்கும் குறைவாக ரூ. 244·43 கோடி அளவுக்குச் சுருக்கப்பட்டது.

ஆனால், அந்தச் சுருக்கப்பட்ட திட்டத்தைக்கூட வடநாட்டவர் அங்கீகரிக்கவில்லை!

திட்டத்தின் அளவை மேலும் சிறிதாக்குமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது; டில்லி திட்டக் குழு, ஆந்திர சர்க்காருக்கு தாக்கீது அனுப்பியிருக்கிறது.

முதல் திட்டத்திலேயே தங்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய பங்கினை தென்னாட்டு மாநிலங்கள் பெறவில்லை என்ற குறைபாடு—தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது.

எனவே, 'இரண்டாம் திட்டத்திலேனும், வட நாட்டு மாநிலங்களைக் காட்டிலும் தென்னாட்டு மாநிலங்களுக்கு அதிகமான பங்கு வேண்டும்,' என்று, அதற்கான நியாய விளக்கங்களுடன் கோரப்படுகிறது; ஆனால், அந்தோ! பரிதாபம்!—கோரிக்கைகள் தூசுளாகின்றன; திட்டத்தைச் சுருக்கு! மதிப்பைக் குறை!—என்ற கணைகள் வருகின்றன!

ஆந்திராவின் 'கதி' தெரிகிறது; சில நாட்களில் திட்ட வட்டமாகத் தெளிவாகத் தெரிந்துவிடும்!

சென்னை சர்க்கார் தயாரித்துள்ள சுமார் ரூ. 393 கோடி மதிப்புடைய திட்டம் எந்த அளவு சுருங்கவிருக்கிறது என்பதை அடுத்த கிழமை இறுதிக்குள் நாம் தெரிந்துகொள்ளலாம்.

வடநாட்டவர் கையில் தென்னாட்டவரை ஆளும் பொறுப்பு இருக்கும் வரை, தென்னாட்டவரின் 'கதி' நாம் கணக்கிட்டு வைத்திருக்கிறபடிதான் அமையும் என்பதை, அப்போதாவது, 'அகில இந்தியா'க்கள் உணருவாரா என்பதைத்தான் நாட்டு மக்கள், கூர்ந்து கவனிக்க வேண்டும்.

உங்கள் குறிப்புக்கு!

★

சென்னை மாநிலத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் செலவிட உத்தேசித்துள்ள தொகையும், துறைகளும் வருமாறு:—

	கோடிக்கணக்கில்
விவசாயம்	ரூ 18
நீர்ப்பாசனம்	26
மின்சாரம்	74
பெரிய நடுத்தரத் தொழில்கள்	42
சிறிய கிராம கைத்தொழில்கள்	38
சாலைகள்	19
கல்வி	38
மருத்துவம்	14
பொது சுகாதாரம்	29
தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள் நலனுக்கு	41
சமூக வளர்ச்சி திட்டங்கள், தல வளர்ச்சி திட்டங்களுக்கு	32
கூட்டுறவின்கீழ் கைத்தறித் தொழில்களுக்கு	8

தொழிலாளருக்கான அரசாங்க 'இன்ஸ்யூரன்ஸ்' திட்டம்

52,000 சென்னை தொழிலாளர் பயன்பெறுவர்

சென்னை, ஆக. 4—

சென்னை நகரிலும் சுற்றுப்புறங்களிலும், தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை அமுல் செய்ய சர்க்கார் தீர்மானித்திருப்பதாக மந்திரி பக்தவத்சலம் தெரிவித்தார்.

விரைவிலேயே மதுரை, திருப்பூர், உடுமலை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம், கோழிக்கோடு, பெரோகே, சேலம், மங்களூர், கோயில்பட்டி முதலிய இடங்களிலும் இந்த இன்ஷ்யூரன்ஸ் திட்டம் அமுல் செய்யப்படும் என்றும் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

இந்தத் திட்டத்தின் கீழ் தொழிலாளர்களின் நலனுக்கென, 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்று துவக்க வேண்டும் என்றும், திட்டம் அமுல் செய்யப்படுமுன்பே மருத்துவமனை துவக்க வேண்டும் என்பது சர்க்காரின் நோக்கம் என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

இந்தத் திட்டம் அமுல் செய்யப்படுவதால், 290 தொழிற்சாலைகளில் வேலை செய்யும் 52,000 தொழிலாளர்கள் பலன் பெறுவர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்திய விமானங்கள், 1954 ஜூலை டிசம்பர் மாத காலத்தில் மொத்தம் சுமார் 132 லட்சம் மைல்கள் பறந்து சென்றிருக்கின்றன. அதற்கு முந்திய ஆறுமாத காலத்தில் அவை பறந்து சென்ற தூரம் மொத்தம் 120 லட்சம் மைல்களே ஆகும்.

தேர்தல் சட்டத்தைத் திருத்த இரண்டாவது மசோதா

ஏற்பட இருக்கும் மாறுதல்கள்

மக்கள் சபைக்கும், எல்லா மாநில சட்டசபைகளுக்கும் ஒரே காலத்தில் பொதுத் தேர்தல் நடத்துவதற்கு வசதி செய்யும் வகையில், தேர்தல் சட்டத்திற்கான திருத்த மசோதா ஒன்றை மக்கள் சபையில் சட்ட மந்திரி படாஸ்கர் கொண்டுவந்தார்.

தற்போதுள்ள சட்ட விதிகளின்படி, ஒரேகாலத்தில் மேற்கண்டவாறு தேர்தல் நடத்துவதற்கு சில இடையூறுகள் உள்ளன.

இப்போதுள்ள மக்கள் சபையின் ஆயுளும், மாநில சட்டசபைகளின் ஆயுட்காலமும், 1957 முற்பகுதியில் பல்வேறு தேதிகளில் காலாவதியாகின்றன.

திருத்த மசோதாவில் 76 விதிகள் இருக்கின்றன. சென்ற பொதுத் தேர்தல் நேரத்திலும், அதற்குப் பின்னரும், தேர்தல் குழுவிற்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு திருத்தங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மசோதாவின்படி செய்யப்படுவன:—

தேர்தல் காரியங்களுக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள கால அளவில் 15 நாட்கள் குறைக்கப்படும்; இதனால் அபேட்சகர்களின் செலவுகள் குறையும்.

சில அபேட்சகர்களையே தேர்தல் ஏஜெண்டுகளாக நியமித்துக் கொள்கிறார்கள்; இது அத்தனை நல்லதொரு ஏற்பாடாகத் தெரியவில்லை. அபேட்சை மனுக்களில், தேர்தல் நியமனம் பற்றிக் குறிப்பிடுவது அவசியமல்ல என்றும், அபேட்சை பத்திர முறையை சுலபமானதாக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ராஜ்யங்கள் சபை, மாநில மேல் (சட்ட)சபைகள் ஆகியவற்றிற்குத் தேர்தலில் நிற்போர், 'டிபாசிட்' கட்ட வேண்டும்—என்றுள்ள விதியை நீக்கவும், அபேட்சைப் பத்திரங்களை எந்தக் காரணங்களுக்காக நிராகரிக்கலாம் என்பது பற்றிய நடைமுறைகளும் சுலபமாக்கப்படவும் உததேசிக்கப்பட்டிருக்கிறது.

தேர்தல் 'டிரிபியூனல்களி'ல் தற்போது மூன்று உறுப்பினர்கள் இருந்துவருகிறார்கள்; இதற்குப் பதிலாக, இரு மாவட்ட நீதிபதிகள் கொண்ட 'டிரிபியூனல்'கள் ஏற்படுத்தப்படுத்தப்படும்.

தேர்தல் செலவு பற்றி தப்புக் கணக்கு தாக்கல் செய்தால், ஒரு ஆண்டுவரை சிறைத் தண்டனையோ அபராதமோ, அல்லது இரண்டுமோ விதிக்க விதிகள் சேர்க்கப்படும்.

★

வாக்காளர் ஆக நிபந்தனை தளர்த்தப்படுகிறது!

புதுடில்லி, ஆக. 3—

'ஒரு தொகுதியில் ஒரு நபர் 180 நாட்களுக்குக் குறையாமல் வசித்து வந்தால்தான், அவர் வாக்காளராக பதிவு செய்யப்படுவார்,' என்று தேர்தல் சட்டத்தில் உள்ள நிபந்தனையை நீக்கும் திருத்த மசோதா ஒன்றை மக்கள் சபையில் சட்ட இலாகா மந்திரி எச். வி. படாஸ்கர் கொண்டுவந்தார்.

வாக்காளராகப் பதிவு செய்யப்படும் சமயத்தில் சாதாரணமாக ஒரு தொகுதியில் குடியிருக்கும் நபரை வாக்காளராகப் பதிவு செய்து கொள்வதற்கு இந்தத் திருத்தம் வசதி செய்கிறது.

சென்ற 5 வருட காலத்தில் தேர்தல் சட்ட நடைமுறை அனுபவங்களைக் கொண்டு புதுத் திருத்தம் கொண்டு வரப்படுவதாக மசோதாவின் நோக்கம் பற்றிய அறிக்கை கூறுகிறது.

180 தினங்கள், ஒருவர், குறிப்பிட்ட இடத்தில் வசித்தாரா என்பதைக் கண்டறிவது சிரமமாக இருக்கிறது என்றும், அந்தப் பிரிவை வற்புறுத்துவதால் அதிக அனுகூலம் இல்லை என்றும் அறிக்கை கூறுகிறது.

வருடம் ஒரு தடவை வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க வேண்டும் என்னும் பிரிவிலும் மாறுதல் செய்து, முறையை சுலபமாக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

முஸ்லீம்களின் திருமணச் சட்டங்கள்

விசாரணை செய்ய பாக். சர்க்கார் குழு

கராச்சி, ஆக. 4—

பாகிஸ்தான் முஸ்லீம்களுக்கான குடும்பச் சட்டங்கள், திருமணங்கள் இவை பற்றி ஆராய, ஒரு குழு நியமித்திருப்பதாக பாக். சர்க்கார் அறிவித்திருக்கிறது.

இஸ்லாத்தின் அடிப்படையில், பெண்களுக்கு, அவர்களுக்குரிய இடம் தரும் பொருட்டு, இப்போதிருக்கிற திருமணச் சட்டங்கள், மணவிலக்குச் சட்டங்கள் முதலியவற்றில் ஏதேனும் மாற்றங்கள் தேவையா என்பதை, குழு கண்டறியுமாம்.

இயந்திரப் பொறிகள் வாடகைக்கு தரப்படும்

இந்திய சர்க்கார் ஏற்பாடு

பம்பாய், ஆக. 4—

சிறு ரகத் தொழில்களுக்கென இந்திய சர்க்காரால் நிறுவப்பட்ட சிறு தொழில் உதவி நிறுவனம் ஒன்று, வாடகைக்கு இயந்திரப் பொறிகள் கொடுத்துதவும் முறையைக் கையாள இருப்பதாகத் தெரிய வருகிறது.

இத்தகைய பொறிகள் 'பொதுவான' வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் இயந்திரங்களாக இருக்கலாமெனவும், அல்லது, மற்ற உற்பத்தியாளர்களுக்குத் தேவைபான பொறிகளை உற்பத்தி செய்யும் ரகத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம் எனவும் கூறப்பட்டிருக்கிறது.

இத்தகைய இயந்திரங்கள், அவற்றின் மொத்த விலையில் 30 சதவிகிதத்திற்கு அதிகப்படாமல் ஒரு குறிப்பிட்ட துவக்க விலையில் கொடுக்கப்படும் என்றும், பாக்கித் தொகை—அதாவது, விலையின் மீதி 70 சத விகிதத் தொகையும் பல ஆண்டுகளில் இலகுவான தவணைகளில் திருப்பித் தரப்படுவதற்கு வழிசெய்யப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

பூமி வெப்பமாகிக் கொண்டே செல்கிறதாம்!

700 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாறுகிறதாம்!

டோக்கியோ, ஆக. 5—

கேய் பல்கலைக் கழக விஞ்ஞானப் பேராசிரியர் டாக்டர் ஹிடியோ நிஷியோக்கா என்பவர், அடுத்த 250 ஆண்டுகளுக்கு பூமி ஆண்டுதோறும் வெப்பமாகிக் கொண்டே போகும் என்று சொல்லுகிறார்.

பூமியின் பொதுவான தட்ப வெட்ப நிலை 700 ஆண்டுகளுக்கு ஒருமுறை, ஒரு வகையாக மாறி மாறி வரும் என்றும், 'இப்பொழுது, பூமியின் வெப்பம் ஏறிக் கொண்டுபோகும் காலம்' என்றும் அவர் கருதுகிறாராம்!

1955-ம் ஆண்டின் முதல்கால் ஆண்டில், ஜவுளி ஆலைத் தொழில் துறையில் துணி உற்பத்தி அளவு அதற்கு முந்திய கால் ஆண்டின் உற்பத்தியைக் காட்டிலும், சுமார் 11 கோடி கெஜம் அதிகமாக—அதாவது 126 2 கோடி கெஜமாக இருந்தது.

கோலார் தங்கச் சுரங்கம்!

தேசிய மயமாக்க மசோதா தயாராகிறது!

மைசூர் முதன் மந்திரி தகவல்

கோலார் தங்கவயலில் உள்ள தங்கச் சுரங்கங்களை தேசிய மயமாக்குவதற்கான மசோதா ஒன்று தயாராகிக் கொண்டிருப்பதாக மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

'மசோதா எப்போது சட்ட சபையில் கொண்டுவரப்படும் என்பதை இப்போது கூற இயலாது,' என்றும் தெரிவித்திருக்கிறார்.

அவர் அண்மையில் டில்லி சென்றிருந்தபோது, இது குறித்து பிரதமர் நேருவிடமும், இயற்கை வள இலாகா மந்திரியிடமும் விவாதித்ததாகக் கூறினார்.

இப்போது அந்தச் சுரங்கங்களின் உரிமையாளர்களாயிருப்போருக்கு தேசிய மயமாக்குவதற்காகத் தரும் நஷ்ட ஈட்டுத் தொகையை இன்னும் நிர்ணயிக்கவில்லை என்றும், அதுபற்றி சட்ட சபையே நிர்ணயிக்கும் என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

திராவிட அகராதி

லண்டனில் தயாராகிறது

டாக்டர் சிதம்பரநாதன் தகவல்

லண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் இந்திய நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் டி. பர்ரோ என்பார், 'திராவிட அகராதி' ஒன்றை உருவாக்குவதில் ஈடுபட்டிருப்பதாக, அண்மையில் இங்கிலாந்து சென்று திரும்பியுள்ள டாக்டர் ஏ. சிதம்பரநாதன் தெரிவித்திருக்கிறார்.

டாக்டர் பர்ரோ தயாரிக்கும் அகராதியை தென்னாட்டு மக்கள் அனைவரும் வரவேற்பர் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழி பேசும் மக்கள் அனைவராலும் போற்றப்படுகிற திராவிட ஒப்புவமை இலக்கணம் பற்றிய டாக்டர் கால்டுவெல்லின் ஆராய்ச்சியை ஒத்ததாக இருக்கும்—டாக்டர் பர்ரோ தயாரிக்கும், திராவிட அகராதி" என்று டாக்டர் சிதம்பரநாதன் தகவல் தந்திருக்கிறார்.

திராவிடமொழி தத்துவ ஆராய்ச்சி

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துவங்கும்

"அண்ணாமலைப் பல்கலைக் கழக வெள்ளி விழாவினை ஒட்டி, இந்தியப் பேரரசு, பல்கலைக் கழகத்திற்கு ரூ. 3 லட்சம் மானியம் வழங்கியுள்ளது;

"தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவை குறித்து, திராவிட மொழித் தத்துவ ஒப்புவமை ஆராய்ச்சிக்காக இந்த மானியத் தொகை செலவிடப்படும்,"

என்று, துணைவேந்தர் டி. எம். நாராயணசாமி தெரிவித்திருக்கிறார்

'சால்க் போலியோ'

'சால்க் போலியோ' மருந்து இன்னும் இந்தியாவில் பரிசோதித்துப் பார்க்கப்படவில்லை—என்று, உதவி சுகாதார மந்திரி மரகதம் சந்திரசேகரன் மக்கள் சபையில் தெரிவித்தார்.

"மருந்து தயாரிக்கும் முறையை இந்தியாவிற்கு அமெரிக்கா தந்தபோது, எவ்வித நிபந்தனையும் விதிக்கப்படவில்லை," என்றும் அவர் கூறினார்.

இந்த மருந்தை பெரும் அளவில் உற்பத்தி செய்வதற்கான திட்டம் எதுவும் தீட்டப்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

'சுவரொட்டிகள்மூலம் பிரச்சினைகள் விளக்கப்படுகின்றன'

'செஞ்சீன அரசாங்கம் மக்களுடன் தொடர்புகொள்ளும் முறை'

தோழர் ஏ. எஸ். இராசன் கூறிய தகவல்

திருச்சி, ஆக. 2—

இன்று மாலை 6 மணிக்கு, அண்மையில் சீனு சென்று திரும்பிய அனைத்திந்திய தபால்-தந்தி தொழிலாளர் தலைவர் தோழர் ஏ. எஸ். இராசன் எம். ஏ. அவர்கள், திருச்சி தலைமை தபால்-தந்தி நிலையத்திலிருந்து மாபெரும் ஊர்வலத்துடன் திருச்சி நகராட்சி மன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார். வரவேற்புக்கு திருச்சி நகராட்சி மன்ற உறுப்பினர்களும், திருச்சி நகர பிரமுகர்களும், தபால்-தந்தி தொழிலாளர்களும், பொது மக்களும் ஏராளமாக வந்திருந்தனர்.

மாலை 6-30 மணிக்கு, திருச்சி நகராட்சி மன்றத் தலைவர் ஜி. அண்ணாமலை முத்துராஜா அவர்கள், தோழர் ஏ. எஸ். இராசனுக்கு ஒரு வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

தமக்களித்த வரவேற்புக்கு தோழர் இராசன் நன்றி கூறுமுகத்தான்; சீனுவில் கண்டவற்றையும், தொழிற் சங்கத்திற்கும்—நகராட்சி மன்றத்திற்கும் இருக்க வேண்டிய தொடர்பு பற்றியும் குறிப்பிட்டுப் பேசியதாவது:—

"இன்றைய தினம் சரித்திரப் புகழ்பெற்ற திருச்சி நகரில், நகர மன்ற சார்பில் எனக்கு வரவேற்பு அளிப்பது கண்டு பூரிப்படைகிறேன். திருச்சி நகரசபை, ஒரு தொழிற் சங்கத் தலைவனுக்கு வரவேற்பு அளிப்பது இதுதான் முதல் தடவை என்று கருதுகிறேன். எனக்கு அளித்த வரவேற்பு—2,50,000 தபால்-தந்தி தொழிலாளர்களுக்கும் அளித்த வரவேற்பாகும்.

"வெளிநாடு சென்றுவந்த தலைவர்கள் அனைவருக்கும் இது போன்று, நகராட்சி மன்றங்கள் வரவேற்பு அளிப்பதில்லை; எனக்கு மாத்திரம் ஏன்? மக்கள் சேவை எங்களது குறிக்கோள்; தபால் தொழிலாளர்கள் மக்களோடு தொடர்பு கொண்டவர்கள்; அவர்கள் தேவையை மறுக்க முடியாது.

"அதேபோன்று, நகரசபை உறுப்பினர்களும், அன்றாடம், மக்களை சந்திக்க வேண்டும். நானும், எங்கள் சங்கத்திலே உள்ள நிர்வாகிகளும் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; அதேபோன்று, நீங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; எனவே, நாம் இருவரும் ஒன்றுபட்டால்தான் மக்களுக்கு சேவை செய்ய முடியும்.

"உதாரணமாக, சீனுவில், ஒரு தெருவில் அஞ்சல் நிலையம் திறக்கப்படவேண்டுமென்றால் நகராட்சியின் ஒப்புதல் கேட்டு, அவர்கள் ஒத்துழைப்போடு திறந்து வைக்கிறார்கள்; ஆனால், நம் நாட்டில் அந்த நிலை இல்லை. இங்கு இருக்கின்ற ஒரு மக்கள் சபை உறுப்பினர், தனது வசதிக்கு, தனது வீட்டின்முன் ஒரு தபால் நிலையம் திறக்க வேண்டுமென்று டில்லியிலுள்ள போக்குவரத்து மந்திரிக்கு ஒரு கடிதம் எழுதினால், திறந்து வைக்க அனுமதி கொடுத்து விடுகிறார்கள். மக்கள் சபைக்குச் சென்றவர்கள், நமது குறையைப் பற்றி பேசுவது இல்லை; 'அடுத்த தேர்தலுக்கு எந்தத் தொகுதியில் நிற்கலாம்,' என்றுதான் அவர்கள் திட்டம் போடுகிறார்கள்.

"தபால் - தந்தி தொழிற் சங்கத்திலே காங்கிரஸ்காரர்கள், திராவிட கழகத்தார், திராவிட முன்னேற்றக் கழகத்தார், கம்யூனிஸ்டுகள், மற்றும் பல கட்சிக்காரர்கள் இருக்கின்றனர். தொழிற் சங்கத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் ஏதாவது ஒரு அரசியல் கட்சிக்கு அடிமையாக இருந்தால், மற்றக் கட்சியைச் சார்ந்த தொழிலாளர்களுடைய வெறுப்பை சம்பாதித்துக் கொள்ள வேண்டிவரும்; அதன் காரணமாக, தொழிற் சங்கம் உடைந்துவிடும்.

உதாரணமாக, இரயில்வே தொழிற் சங்கம் ஒரு அரசியல் கட்சியில் சம்பந்தப்பட்டிருந்த காரணத்தால்தான், அச்சங்கத்தின் தலைவரை செயலாளர் நீக்கிவிட்டதாக அறிக்கை விடவும், செயலாளரை தலைவர் நீக்கிவிட்டதாகவும் அறிக்கை விட்டுக்கொண்டு, தொழிற் சங்கத்தை பிளவுபடுத்தி, தொழிலாளர்களின் ஒற்றுமையைக் குலைத்தார்கள்; இந்த நிலை எங்கள் சங்கத்துக்கு இல்லை. அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெறுகிறோமே தவிர, அவர்களுக்கு அடிமையாகிவிடுவதில்லை.

"அதேபோல், திராவிடர் கழகமாக இருந்தாலும் தி. மு கழகமாக இருந்தாலும், காங்கிரசாக இருந்தாலும், நாட்டு மக்களுக்கு வேண்டிய நல்ல திட்டங்களை சொல்லும்போது நாம் ஆதரிக்கிறோம். 'திட்டம் நல்லதா? கெட்டதா?' என்று பார்ப்போமே தவிர, 'எந்தக் கட்சி தலைவர்கள் சொல்லுகிறார்கள்,' என்று, ஆட்களைக்கவனிப்பதில்லை.

"அதேபோல், நகர சபையிலும் அரசியல் கட்சிகள் தேவையில்லை அரசியல் கட்சிகளின் பேரில் உறுப்பினர்கள் வந்தால் கட்சி பூசல்கள் வளருமே தவிர, மக்களுக்கு சேவை செய்ய முடியாது. சீனுவில், நகராட்சி மன்றங்களுக்கு தொழிற் சங்கப் பிரதிநிதிகள்தான் உறுப்பினர்களாக வருகிறார்கள்; எனவே, நகர சபைகள், அரசியலைப் பின்வைத்து, தேவைகளை முன்வைக்கவேண்டும்.

"நாங்கள் அரசியல் பேசினால், மந்திரிகள் செய்யத் தவறிய காரியத்தை எடுத்துச் சொன்னால், 'இவர்களெல்லாம் அரசாங்க எதிர்ப்பாளர்கள்,' என்ற காரணத்தைக் காட்டி-அல்லது, 'ஆளும் கட்சிக்கு எதிரானவன்,' என நினைத்து, வேலையிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். நாங்களும் பொது மக்கள் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். உதாரணமாக, இரயில்வே தொழிலாளர்கள் எங்களிடம் ஒரு 'போஸ்டு கார்டு' வாங்கும்போது, அவர்கள், பொதுமக்களாகக் கருதப்படுகிறார்கள்; அதேபோல், நாங்கள் இரயில்வே டிக்கெட் வாங்கும்போது, பொது மக்களாக எங்களை அவர்கள் கருதுகிறார்கள்.

"இன்று தபால்-தந்தி சங்கத்திற்கு நான் தலைவனாக இருக்கிறேன்; நாளைக்கு நான் அதிலிருந்து நீக்கப்பட்டால், எனக்கு தபால் அலுவலகத்தில் வேலை கிடைக்காது; ஆனால், சீனுவில், தொழிற் சங்கத் தலைவர்களின் பதவி காலம் முடிந்துவிட்டால் அவர்களுக்குத் திரும்ப வேலை தரப்படுகிறது. நமது நாட்டில் உழைப்புக்கு மதிப்பில்லை; ஆனால், சீனுவில், உழைப்புக்கு முதலிடம் கொடுக்கிறார்கள்.

"சீனுவின் ஒவ்வொரு தெருவின் முனையிலும், அன்றாடப் பிரச்சினைகளை, சுவரொட்டிகள் மூலம் எழுதி, பொதுமக்களை அரசாங்கத்தோடு ஒத்துழைக்க ஊக்கமூட்டுகிறார்கள்; அதனால், நாட்டின் நிலையை அங்கே எளிதில் புரிந்துகொள்ளுகிறார்கள். அதே போல், நம் நாட்டில், நகரசபைகள், வார்டுகள்தோறும் வாசகசாலைகளும், புத்தக நிலையங்களும் திறந்து, நமது மக்களையும் அறிவுள்ளவர்களாக ஆக்க வேண்டும்

'ஆனால், அதை விடுத்து, 'பி. சி. ஜி. ஊசி தேவையா?—இல்லையா? — என்ற விவாதத்தில், நமது நகர சபைகள் இறங்கியிருக்கிறது. பண்டித நேரு இப்பகுதிக்கு வந்தால் ஏராளமான கூட்டம் கூடுகிறது; கூட்டத்திற்கு போய் வந்தவர்களைக் கேட்டால், 'நன்றாகப் பேசினார்' என்று சொல்வார்களே தவிர, 'என்ன பேசினார்' என்றால் சொல்லுவதற்குத் தெரிவதில்லை; அந்நிலையிலுள்ள மக்கள், நல்ல முறையில், நாட்டின் நிலைமையைத் தெரிந்துகொள்ள நகர சபைகள் பாடுபட வேண்டும்.

"சீனுவில், மாணவர்கள் படித்தே ஆகவேண்டும் — என்ற விதி இருக்கிறது; இங்கு, 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்' என்று சொல்லுகிறோமே தவிர, படிக்காதவனை மன்னன் என்று ஒப்புக் கொள்வதெப்படி? நமது மக்கள், தன்னைப் பற்றியே தெரிந்து கொள்வதில்லை. ஒருவன் உயர்தர அதிகாரியாக இருந்து மற்றவன் பியூனாக இருந்தால், பியூனாக இருப்பவன், 'உயர்தர அதிகாரியாக இருப்பவன் போன ஜென்மத்தில் புண்ணியம் செய்ததால் அதிகாரியாக இருக்கிறான்; நாம் பாவம் செய்ததால் பியூனாக இருக்கிறோம்,' என்று கருதுகிறான். அந்த நிலையை சீனுவில் மாற்றியமைத்து விட்டார்கள். எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. அங்கே சாதாரண தொழிலாளர்களுக்கு இருக்கும் அடிப்படை சம்பளத்தைவிட உயர்தர அதிகாரிகளுக்கு 6 மடங்குதான் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது;

"பொது நாணயம் அங்கே வளர்க்கப்படுகிறது; ஒரு மேஜையில் பத்திரிகையை வைத்துவிட்டு, பக்கத்தில் ஒரு உண்டியலையும் வைத்துவிடுகிறார்கள்; பத்திரிகை தேவையுள்ளவர்கள் எடுத்துக் கொண்டு, அதற்குள்ள இல்லைரையையும் அதில் போட்டுவிடுகிறார்கள்; யாரும் திருடுவதில்லை; நமது நாட்டில் அதுபோன்று செய்ய முடிவதில்லை; காரணம், ஒருவரை ஒருவர் நம்புவதில்லை.

"சீனுவில் கோவில்கள் இருக்கிறது; அதற்குப் பின்னால் தோட்டங்கள் இருக்கிறது; ஆனால், கோவில்களுக்கு வயதானவர்கள்தான் செல்லுகிறார்கள்; இளைஞர்களும், பெண்களும் தோட்டத்திற்கு செல்லுகிறார்கள்; மூடப் பழக்க வழக்கங்கள் அங்கே ஒழிக்கப்பட்டுவிட்டது; எனவே, நமது நாட்டிலும் அந்நிலையை உண்டு பண்ண நகராட்சி மன்றங்கள் பாடுபடவேண்டும்."

ஓராண்டுக்குள் நிலச் சீர்திருத்தம்

காமராசர் தகவல்

சென்னை, ஆக. 4—

"இப்போது முதல் ஓராண்டு காலத்திற்குள், உத்தேசித்துள்ள நில சீர்திருத்தப் பிரரேபணைகளையெல்லாம் நிறைவேற்றும் வேலையை முடித்துவிடலாமென எதிர்பார்க்கிறோம்; அது வரையில், சாகுபடி செய்து கொண்டிருக்கும் எந்தக் குடியானவரும், அவர் வசமுள்ள நிலத்திலிருந்து எக்காரணத்தை முன்னிட்டும் வெளியேற்றப்படக் கூடாதென எண்ணுகிறோம்;

"மிக்க முன்னெச்சரிக்கை ஏற்பாடாக, இப்போதுள்ள சாகுபடியாளர் உரிமைப் பாதுகாப்பு மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஓராண்டு கால வரம்பை மேற்கொண்டு நீடிப்பதற்கான அதிகாரத்தையும் சர்க்கார் மேற்கொள்வர்,"

என்று, முதலமைச்சர் காமராசர், பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்.

ஆசிரியர்களின் சுதந்திரத்தில்......

சர்க்கார் தலையிடுவதாகக் குற்றச்சாட்டு

திருச்சி, ஆக. 2—

"பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ஆசிரியர்கள் சுதந்திரத்திலும், தன்மான உணர்விலுங்கூட கல்வி இலாகாவின் தலையீடு அதிகரித்துக்கொண்டே வருவது, கண்டனத்திற்குரியது," என்று, சென்னை பிஷப் டி. செல்லப்பா, திருச்சி புத்தூர் பிஷப் ஹெபர் உயர்நிலைப் பள்ளியில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இன்னுமா இந்த நிலை நீடிப்பது?

சாத்தக்குடி நகர் எல் ஏ. வி. கடுத்தரப் பள்ளியில், பார்ப்பன ஆசிரியருக்கும்—பார்ப்பனரல்லாத ஆசிரியருக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக, பள்ளி நிர்வாகம், பார்ப்பனரல்லாத ஆசிரியரை பதவியிலிருந்து விலக்கிவிட்டது.

அதற்குக் கண்டனம் தெரிவிக்கும் அறிகுறியாக, 20—7—55ல், பள்ளி மாணவர்கள் அனைவரும் பள்ளி செல்ல மறுத்துவிட்டனர்.

மாவட்ட தி. மு. க. செயலாளர் கே. வி. கே. சாமி, நகர் தி. மு. க. செயலாளர் எம். எஸ். சிவசாமி ஆகியோர் இப்பிரச்சினையில் தலையிட்டு நிர்வாகத்தை அணுகியதில், மூன்று நாட்களில் விலக்கப்பட்ட ஆசிரியரை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்வதாக உறுதி கூறியதின் பேரில் 21—7—55 முதல் மாணவர்கள் பள்ளி சென்றனர். (ந - தி.)

1954 டிசம்பர் திங்கள் இறுதியில், மொத்தம் 628 விமானங்கள் நடப்பு காலத்துக்கான 'சர்டிபிகேட்'களைப் பெற்றிருந்தன; அவற்றில் 199 விமானங்கள், 'பறப்பதற்குத் தகுதியுள்ளவை' என்று, நடப்பு காலத்துக்கான 'சர்டிபிகேட்டு'களைப் பெற்றிருந்தன.

மக்கள் சபையில் 'கோரம்': சாப்பாட்டு நேரத்தில் தேவையா?

புதுடில்லி, ஆக 3—

மக்கள் சபையில், சாப்பாட்டு நேரத்தின்போது, 'கோரம்' இருக்கத் தேவை இல்லை என்று கூறப்படும் 'மரபு' குறித்து, எதிர்க்கட்சி உறுப்பினரொருவர் 'அப்படி ஒரு மரபு—பழக்கம் இல்லை' என்று வாதாடியிருக்கிறார்.

சட்ட மந்திரியான பிஸ்வாஸ், 'அந்த மரபு பற்றி தகராறு எழுப்பப்படுமானால், அரசியல் சட்டமே திருத்தப்பட வேண்டியிருக்கும்,' என்று கூறியிருக்கிறார்.

"உறுப்பினர்கள், ஒன்று—தங்களின் சாப்பாட்டை மறக்க வேண்டும்—அல்லது, தங்கள் பொறுப்புகளைக் கைவிட வேண்டும்; சாப்பாட்டு நேரத்தில், 'கோரம்' இருப்பது பற்றிய பிரச்சினை அடிக்கடி எழுகிறது; எனவே, இதற்குத் தகுந்தாற்போல, அரசியல் சட்டத்தைத் திருத்துவதே மேல்," என்று, எஸ். எஸ். மூர் என்ற உறுப்பினர் தெரிவித்திருக்கிறார்.

"'மரபை' ஒப்புக்கொண்டிருப்பது, அரசியல் சட்டத்திற்கு விரோதமானதாக இருக்கக்கூடுமாதலால், சபையில் 'கோரம்' நிலவும்வரை, சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கலாம்," என்று, எச். வி. காமத் யோசனை கூறியிருக்கிறார்.

"சாப்பாட்டு நேரத்தின்போது, 'மரபு'ப்படி, வாக்கெடுப்பது நடத்துவதில்லை," என்பதை உதவி சபாநாயகர் அனந்தசயனம் அய்யங்கார் குறிப்பிட்டு, "எனவே, உறுப்பினர்கள் இது பற்றி பிரச்சினை எழுப்ப வேண்டாம்," என்று குறிப்பிட்டிருக்கிறார்."

‘இந்தி பற்றிய அரசாங்கக் கொள்கை’

கிளர்ச்சிகளுக்குப் பயந்து உருவாக்கினதல்லவாம்!

மந்திரி சுப்பிரமணியம் விஸ்தாரம்

சென்னை, ஆக. 5—

“ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதெனத் திட்டமிடுவதற்கு வெகு நாட்களுக்கு முன்பே, ‘யூனியன் சர்க்கார் இந்தி விஷயத்தில் அவசரம் காட்டாது, சாவதானமாக நடந்துகொள்ளவேண்டும்,’ என்று, சென்னை சர்க்கார்தான் கோரினர்; எனவே, ஏற்கனவே சர்க்கார் முடிவு செய்துவிட்ட ஒரு விஷயத்தை சாதகமாக ஆக்கிக்கொண்டு, ஏதோ ஒரு இலட்சியத்திற்காகப் போராடப் போவதாகக் கூறி வீரர் விருதுபெற சிலர் நினைப்பார்களேயானுல், அவர்களை அலட்சியப்படுத்துவதுதான் அதற்குப் பரிகாரமாகும்;

“அகில இந்திய போட்டிப் பரீட்சை மொழியாக இந்தியை உடனடியாகப் புகுத்தக் கூடாது— என்று சென்னை சர்க்கார் உறுதியான முடிவு மேற்கொண்டது, ‘கிளர்ச்சிகள் திட்டமிடப்படுகின்றன’—என்பதினுல் அல்ல என்பதைத் தெளிவாக்கிவிட விரும்புகிறேன்;

“இந்த சர்க்கார் தெரிவித்த கஷ்டங்களை பிரதமர் நேருவும், உள்நாட்டு மந்திரியும் புரிந்துகொண்டுள்ளனர்; மேலும் அவர்கள், தங்கள் கொள்கையினைத் தெளிவாக அறிவித்திருக்கின்றனர்,”

—என்று, மந்திரி சுப்பிரமணியம் சட்ட சபையில், கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறுர்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

“அரசியல் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளபடி, யூனியன் சர்க்காரின் அலுவல் மொழி இந்தி—அவ்வளவுதான்; அதனை தேசிய மொழியென்று கூறுவது தவறு;

“அரசியல் சட்டத்தின் எட்டாவது பிரிவில் குறிப்பிட்டிருக்கிற [illegible] யும் ஒன்று என்று கூறுவதற்கும், ஒரு மொழியைக் காட்டிலும், மற்ற மொழி உயர்ந்தது அல்ல என்று கூறுவதற்கும் இந்தியப் பிரதமர் நேருவிடமிருந்தும், அரசியல் சட்டத்திலிருந்தும் நான் ஆதாரங்கள் காட்ட முடியும்;

“அந்த 14 மொழிகளின் வளர்ச்சிக்கும், மத்திய சர்க்காரும் மாநில சர்க்கார்களும் பாடுபட வேண்டியது கடமையாகும்.

“நமக்கு ஒரு ‘பெடரல்’ சர்க்கார் இருப்பதால், யூனியன் சர்க்காரின் அலுவல் மொழியாக ஒரு மொழி தேவைப்படுகிறது; அந்த மொழியாக இந்தி இருக்கும். அந்த மொழியாக ஆங்கிலம் இருக்கமுடியாது; ஏனெனில், அது, அன்னிய ஆட்சியின் விளைவாகக் கொண்டு வரப்பட்டது என்பது, பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது;

“இந்தி மொழி சுமார் 14 கோடி மக்களால் பேசப்படுகிறது. அதைத் தவிர, இந்தி அலுவல் மொழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு வேறெந்தக் காரணமும் இல்லை. இதனுலேயே, இதர வட்டார மொழிகள், இந்தி மொழிக்குத் தாழ்வான ஒரு நிலையில் வைக்கப்பட்டுவிட்டதாகப் பொருள் இல்லை

“யூனியன் சர்க்காரின் அலுவல் மொழியாக இந்தியை ஏற்றுக்கொள்வதற்குங்கூட அரசியல் சட்டத்தில் ஒரு வழிமுறை வகுக்கப்பட்டிருக்கிறது; அதன்படி முதல் ஐந்தாண்டுக் கால முடிவில் இப்போது ஒரு ‘கமிஷன்’ நியமிக்கப்பட்டிருக்கிறது.

“அந்தக் குழு சிபாரிசுகள் செய்வதற்குக்கூட நாட்டின் தொழில், கலாச்சார, விஞ்ஞான முன்னேற்றத்தையும், பொது வேலைகளுக்கானவற்றில், இந்தி பேசாத மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்; எனவே, குழு, இந்தி பேசாத பகுதி மக்களின் சவு[illegible]ங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்;

“நமது மொழிக் கொள்கை எல்லாம், ‘வட்டார மொழியே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்,’ என்பதுதான்;

“வேறொரு கழகத்தார், ‘தமிழ் உடனடியாக ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும்,’ என்று கோருகின்றனர்.

“இப்போது சென்னை மாநிலத்தில் மூன்று மொழிகள் நிலவுகின்றன.

“மாநில புனரமைப்புக் குழு, வரும் செப்டம்பர் இறுதியில் தன் [illegible] என்று தெரிகிறது; அதன் [illegible]ர், மத்திய சர்க்காரே இறுதி முடிவு மேற்கொள்வர்; எனவே, அதற்கிடையில், வட்டார மொழியான தமிழ் மொழியை இங்கு உடனடியாக, ஆட்சி மொழியாகப் பிரகடனப்படுத்தத் தேவை இல்லை; அப்படிச் செய்வதினுல், இப்போதுள்ள சூழ்நிலையில் தொல்லைகள் பல ஏற்படக்கூடும்.

“எனவேதான், தமிழ் மொழியிடம் எங்களுக்குப் பற்றுதல் குறைவு என்பதினுல் அல்ல—அதில் உள்ள சிரமங்களினுல்தான், ‘பொறுத்திருப்போம்’ என்று நாங்கள் கூறுகிறோம்.

“இதற்கிடையில், நாம், தமிழ் மொழி ஆட்சி மொழியாவதற்குத் தேவையானவற்றையும் தயாரித்துக் கொண்டிருக்கிறோம்—‘வட்டார மொழிதான் ஆட்சி மொழி’ என்பதை நாம் ஏற்கனவே, அறிவித்துவிட்டிருக்கிறபடியால்!

“மேலும், போதனு மொழியாகவும் தமிழ் மொழிதான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது;

“மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் இந்தியை போதனு மொழியாக ஏற்றுக் கொள்வது தீங்கானதாகும்.”

கோஷ்டி சண்டையின் எதிரொலி!

முன்னுள் மந்திரி உட்பட ஐவருக்குக் கல்தா!

தமிழ்நாடு காங்கிரஸ் செயற்குழு நடவடிக்கை

சென்னை, ஆக 5—

சென்னை முன்னுள் மந்திரி பெருமாள்சாமி ரெட்டியார் உட்பட ஐந்து பேர்களை, ‘வடஆர்க்காடு மாவட்டக் கழகத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வியுற்றதற்குக் காரணமாயிருந்தனர்,’ என்று கூறி, மூன்றுண்டுகளுக்கு காங்கிரஸ் கட்சியிலிருந்து விலக்கிவைத்து, தமிழ் நாடு காங்கிரஸ் கட்சிச் செயற்குழு முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

திருச்சி நகர சபைத் தலைவர் மீது கட்டளையை மீறி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்ததற்காக தற்காலிகமாக நீக்கிவைக்கப்பட்டிருந்த 5 நகரசபை உறுப்பினர்களும் மன்னிப்புக் கோரியதால் அவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிக நீக்க உத்தரவை, செயற்குழு ரத்து செய்திருக்கிறது.

சி. பி. சிற்றரசு பரணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் மத்தியதரைக் கடலையும் கடந்து சென்றுள்ள அறிகுறியை எடுத்துக்காட்டுகிறோம்.

“நாம் ஏன் திராவிட நாடு கேட்கிறோம்? மனித உணர்வோடு பார்த்தாலும், அரசியல் கண்கொண்டு பார்த்தாலும் வடவர் நம்மிடம் எப்போதும் நண்பர்களாயிருந்ததில்லை;’ இனி அவர்கள் இருக்கப் போவதும் இல்லை; இந்தியா முழுவதையும் ஆட்சி முறைக்காக ஒன்றாகப் பிணைத்து ஆங்கிலேயன் ஆண்ட போதும், வடவர்கள் நம்மிடம் அன்பாக இருந்ததில்லை; ஆங்கிலேயரிடமிருக்கும் அரசியலைக் கைப்பற்ற, நம்மை அவர்கள் ஆயுதங்களாக பயன்படுத்திக் கொண்டார்கள் என்பது தவிர வேறென்ன சொல்ல முடியும்?

“மாளிகைகளில் அவர்கள் குடியேறிக்கொண்டு வெறும் மரத்தடிகளில் நம்மை நிற்கச் செய்திருக்கிறுர்கள்; அதுவும், அந்த மரத்தின் நிழலில் தான் நாம் ஒதுங்கலாமே தவிர அதன் பூவையோ, காயையோ, பழத்தையோ நாம் பறிக்க முடியாதவாறு நமது கைகளை ‘சட்ட விலங்கு’களால் கட்டிப் போட்டிருக்கிறுர்கள்; வெய்யிலுக்கு அந்த மரத்தின் நிழல் கொஞ்சம் உதவலாம்; ஆனால், மழை - காற்று - பனி - சூறாவளி - இடி - மின்னல் ஆகிய இயற்கை உற்பாதங்களுக்கு முன்னே நாம் என்ன செய்யமுடியும்?

“ஆகவேதான், நாமும், மரத்தடி வாசத்தை மாளிகை வாசமாக்க வேண்டுமென்று விரும்புகிறோம்;

“அந்த உரிமையை வழங்காத ஆட்சியை நாம் ஏற்க மாட்டோம் — என்று சொல்லுகிற கடைசி நாள், ‘சுதந்திரத் திராவிட குடியரசு கூட்டாட்சியின்’ கொடி பறக்கும் முதல் நாள்!

“அந்த நாள், ‘கிழ்வானம் வெளுத்து, கதிரோன் தன் கடமையைச் செய்ய தன் செங்கதிர்களைப் பரப்பிவரும் நேரத்தில், நமது கடியாரத்தில் இரண்டாவது முறையாக அலாராம் அடிக்கும் நாளாக இருக்கும்; அந்த நாளை நோக்கி, நமது படைகள், அயராமல் சென்று கொண்டிருக்கின்றன!

“உலகம் எப்போதும் இருளாக இருந்ததில்லை; ஆகவே நிச்சயமாக, இன்று இருண்டிருக்கும் திராவிடத்திற்கு ஒளியுண்டு; அந்தப் பேரொளியை—செஞ்சுடரைக் காணும் வாய்ப்பு, வலிய நம்மைத் தேடிவரும் என்றெண்ணுமல், கடமையை கண்ணியமாக ஆற்றுவதின் மூலம், காரியம் கைகூடும் என்ற உள்ள உறுதியோடு, ‘பணியாற்றுவோம் வாரீர்,’ என்று, தாயகத்தின் விடுதலையில் விருப்பமுள்ள அனைவரையும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.”

கூட்டத்தில் தோழர்கள், அண்ணுமலை, சம்பந்தம், முகவை. ஆர். எஸ். பாண்டியன், கண்ண[illegible]சன் ஆகியோர் பேசினர்.

‘கண்ணியக் குறைவாக’ நடந்து கொண்ட கிறித்துவ ‘மிஷன்’!

‘தகுந்த நடவடிக்கை’யை சர்க்கார் மேற்கொள்கிறதாம்

சென்னை, ஆக. 4—

இந்தியாவின் நிலைபற்றி கண்ணியக் குறைவாக வெளிநாடுகளில் உள்ள பல நிறுவனங்களுக்குக் கடிதம் எழுதி, பண உதவி செய்யுமாறு கோரிய கிறித்துவ ‘மிஷன்’ ஒன்றின்மீது ‘தகுந்த நடவடிக்கை,’ எடுக்கப்படவிருப்பதாக சட்டசபையில் மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறுர்.

“இந்தியா, மிகவும் ஏழ்மையிலிருக்கிறது; இந்தியர்களுக்குப் போதுமான, சரியான வளமுடைய உணவு கிடைப்பதில்லை; இந்த நிலையில், இந்தியா கம்யூனிசத்திற்கு பலியாகாமலிருக்க வேண்டுமானுல், செல்வம் மிகுந்த மேற்கத்திய நாடுகள், இந்தியாவிற்கு உதவி செய்தால் தான் முடியும்,”

என்று, ஒரு கிறித்தவப் பள்ளியின் தலைவர் வெளிநாட்டு நிறுவனங்களுக்குக் கடிதம் எழுதியிருந்தார் என்றும், அது கண்ணியக் குறைவான காரியம் என்று கருதப்படுவதால் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும், மந்திரி, சட்டசபையில், உபகேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறுர்.

கே. எஸ். பாண்டியன் படிப்பகம் (திருவல்லிக்கேணி)

2-ம் ஆண்டு விழா

★

7—8—55 மாலை 5 மணிக்கு

சென்னை-திருவல்லிக்கேணி கடற்கரையில்

தலைவர் :
காஞ்சி-கல்யாணசுந்தரம்

பேசுவோர் :
சி. என். அண்ணுதுரை
பி. ஆர். கோகுலகிருட்டிணன்

இசை : இரா. சண்முகம்

குறிப்பு : கூட்டத்தில் மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

சென்னை தி. மு. (கிளை) கழகங்களுக்கு

“7—8—55 பிற்பகல் 2 மணிக்கு, இராயபுரம் ‘அறிவகத்’தில், ஓர் அவசரக் கூட்டம் நடைபெறும். சில முக்கிய விஷயங்களைப் பற்றி ஆலோசிக்கப்பட வேண்டி [illegible] செயலாளர்களும், மாவட்ட உறுப்பினர்களும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்,” என்று, சென்னை மாவட்ட தி மு கழகச் செயலாளர் தோழர் இளம் பரிதி அறிவிக்கிறுர்.

கழகக் கூட்டங்கள்

★

அரியாங்குப்பம் (புதுவை)

தி. மு. கழக திறப்பு விழா

மாரியம்மன் கோயில் திடலில்

7—8—55 மாலை 5¼ மணிக்கு

தலைவர்: ச. சிவப்பிரகாசம்

கொடியேற்றுபவர் :
வாணிதாசன்

கழகத் திறப்பாளர் :
சி. பி. சிற்றரசு

★

கவுந்தப்பாடி

பெரியார் மைதானத்தில்

8—8—55 மாலை 6 மணிக்கு

தலைவர் :
எம். சின்னப்பன் எம். சி.

பேசுபவர் :
இரா. நெடுஞ்செழியன்

குறிப்பு : அன்று மாலை கழக அலுவலகத்திலிருந்து ஊர்வலம் புறப்படும். அதுபோது, பவானி வட்டக் கிளைக் கழகச் செயலாளர்களும், வட்டாரக் கிளைக் கழகச் செயலாளர்களும் ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் துறையூர் வருகை

7—8—55 மாலை 6 மணிக்கு துறையூர் மாரியம்மன் கோவில் மைதானத்தில், தோழர் து. ப. அழகமுத்து தலைமையில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, துறையூர் தொகுதி தி. மு. (கிளைக்) கழகங்களின் சார்பில் வரவேற்பு அளிக்கப்படும். தோழர் அன்பில் தர்மலிங்கம் கலந்துகொள்வார்.

எதிர்க் கட்சித் தலைவர் காங்கிரசில் சேருவர்

• பம்பாயில் சம்பவம்

பம்பாய் சட்டசபையின் எதிர்க் கட்சித் தலைவரும், புதிதாக உரு[illegible] மஹாராஷ்டிரக் கிளைச் செயலாளருமான துளசிதாஸ் ஜாதவ் என்பவர், காங்கிரசில் சேர்ந்துவிட முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

தனது முன்னுள் கட்சியான விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியைச் சேர்ந்த பழைய நண்பர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டுவதற்காக அவர் கோலாப்பூருக்கு விரைந்து வந்துள்ளார் என்று கூறப்படுகிறது.

சொற் பயிற்சிக் கூட்டம்

7—8—55 மாலை 6½ மணிக்கு, சென்னை 26-வது வட்ட தி. மு கழகப் பணிமனையில், தோழர் அ. இராவணன் தலைமையில், ‘வேண்டும்’ எனும் பொருள் குறித்து சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

நகர இளைஞர் கழகம்

7—8—55 காலை 9½ மணிக்கு, சென்னை, குளை, 10, மாணிக்கச் செட்டித் தெருவில், ‘பிற்கால இலக்கியங்கள்’ என்பது பற்றி திரு. ஆதி தேவநாதன் பேசுவார்.

சென்னை கல்விச் சங்கம்

7—8—55 மாலை 5 மணிக்கு, சென்னை, பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோட், ஆண் பள்ளியில், ‘திருக்குறள் இன்பம்’ என்னும் பொருள் பற்றி திரு த வே. முருகேசனுர் தலைமையில், திரு. வ. சுப்பிரமணியம் பேசுவார்.

தேசிய தபால்-தந்தி தொழிலாளர் சம்மேளனம்

8—8—55 மாலை 6½ மணிக்கு சென்னை, மவுண்ட் ரோடு தபால் ஆபீஸ் காம்பவுண்டில், தோழர் டி. எஸ் இராமானுசம் தலைமையில் தபால்-தந்தி தொழிலாளர் தலைவர், தோழர் ஏ. எஸ். இராசனைப் பாராட்டி மாபெரும் வரவேற்பு அளிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ